# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.

## மேல்நிலை முதலாமாண்டு சிறப்பு துணைத் தேர்வு, ஜூன் 2019

## தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல்

## செய்திக்குறிப்பு

நடைபெறவுள்ள ஜூன் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத அரசுத் தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களும் (தட்கல் உட்பட) 04.06.2019 (செவ்வாய்கிழமை) பிற்பகல் முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பித்து, வருகைபுரியாத / தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்யும் முறை**

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பித்து, வருகைபுரியாத / தேர்ச்சி பெறாத தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று HALL TICKET என்ற வாசகத்தினை click செய்து, தோன்றும் பக்கத்தில் உள்ள HSE First Year June 2019 Hall Ticket Download (March 2019 Appeared Candidates) என்பதனை கிளிக் செய்து, தங்களது மார்ச் 2019 பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்தால் அவர்களுடைய தேர்வுக் கூட அனுமதிச்சீட்டு திரையில் தோன்றும். அதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்காமல் நேரடியாக ஜூன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்யும் முறை**

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்காமல் நேரடியாக ஜூன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று HALL TICKET என்ற வாசகத்தினை click செய்து, தோன்றும் பக்கத்தில் உள்ள HSE First Year June 2019 Hall Ticket Download (March 2019 Not Appeared – Direct Private Candidates) என்பதனை கிளிக் செய்து, தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்தால் அவர்களுடைய தேர்வுக் கூட அனுமதிச்சீட்டு திரையில் தோன்றும். அதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

..2..

<u>செய்முறைத் தேர்வு உள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாதோருக்கான குறிப்பு</u> :

1. மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டில் மொத்தம் 35 மற்றும் அதற்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின்போது **<u>செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்றால் போதுமானது</u>**. அத்தேர்வர்கள் எழுத்துத் தேர்வினை மீண்டும் எழுத இயலாது.

2. செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அக மதிப்பீட்டில் மொத்தம் 35 மதிப்பெண்களுக்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின் போது எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும்.

3. செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அத்தேர்வர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்ய வேண்டியதில்லை.

மேலும், அதிகபட்ச மதிப்பெண் 75 கொண்ட தொழிற்கல்வி செய்முறை பாடத்தில் தேர்ச்சி பெறாதவர்கள் மீண்டும் செய்முறைத் தேர்விற்கு வருகை தர வேண்டும்.

செய்முறைத் தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தைத் தனித்தேர்வர்கள் தாம் தேர்வெழுதும் தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை அணுகி அறிந்து கொள்ள வேண்டும்.

உரிய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**ஒம்./–**
**இயக்குநர்**

**சென்னை – 600 006**
**நாள்: 03.06.2018**